# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சியில் மன்ற சாதாரண கூட்டம் 17.11.2021 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் **தனி அலுவலர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள் :1</u>

கீழக்கரை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி கதவு எண்.7/2 பாரதி நகர், மாயாகுளம் பஞ்சாயத்து, கீழக்கரை என்ற முகவரியில் உள்ள திரு.எம். இரவி என்பவர் கொடுத்துள்ள விண்ணப்பத்தின்படி, அன்னாரை இந்நகராட்சி ஒப்பந்ததாரராக ரூ. 6.00 இலட்சம் வரையிலான பணிகள் எடுத்து செய்வதற்கும், ஒப்பந்ததாரர் வகுப்பு ஐந்தில் பதிவு செய்வதற்கும், இந்நகராட்சிப் பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் இந்நகராட்சி சேவை மைய பற்றுச் சீட்டு எண். 133/K1/2/21-22/0004314, எண்.01.11.2021ன்படி பதிவு கட்டணம் ரூ.1000+ரூ.10000 செலுத்தப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.**630/2021/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

### <u>தீர்மானம் எண்.912 அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள் :2</u>

கீழக்கரை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி கதவு எண்.1/59 மறவர் தெரு, கீழக்கரை என்ற முகவரியில் உள்ள திரு.எஸ்.முரளி என்பவர் கொடுத்துள்ள விண்ணப்பத்தின்படி, அன்னாரை இந்நகராட்சி ஒப்பந்ததாரராக ரூ. 6.00 இலட்சம் வரையிலான பணிகள் எடுத்து செய்வதற்கும், ஒப்பந்ததாரர் வகுப்பு ஐந்தில் பதிவு செய்வதற்கும், இந்நகராட்சிப் பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் ஒப்பந்ததாரர் மூலம் இந்நகராட்சி சேவை மைய பற்றுச் சீட்டு எண். 133/K1/2/21-22/0004347, எண்.02.11.2021ன்படி பதிவு கட்டணம் ரூ.1000+ரூ.10000 செலுத்தப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.**540/2021/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.913அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :3

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் 2021-22-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத் தொடரில் 24-08-2021-ம் தேதியில், நகராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்ததை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்:70 நாள்: 13-09-2021 ல் விவரப்படியாக அரசாணை வெளியிடப்பட்டது.

மேற்படி, திட்டத்தில் முதற்கட்டமாக மண்சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்ற நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாக தெரிவித்துள்ளதற்கிணங்க, கீழக்கரை நகராட்சியில் உள்ள 4850.31கி.மீ மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்ற ரூ.210.50 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TUFIDCO) மூலம் APPRAISAL செய்யப்பட்டு திட்ட மதிப்பீடு ரூ.210.50 லட்சத்திற்கு பணி மேற்கொள்ள இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் ந.க.எண்.ஜி4, 49718/2021, நாள்.23.102021ன்படி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் **(KNMT)** 2021/22-ன் கீழ், கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் சாலைப்பணிகள் மேற்கொள்ள, அரசாணை (MS) எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள். 30.10.2021ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of the Roads | Length in 'm' | Estimate Rs in Lakhs |
|---|---|---|---|
| 1 | Supplying And Laying Interlock Concrete Paver Block From Ward No. 1,2,3,4,5,8,10, 13,14,15,16,18,20 in Keelakarai Municipality. | 4850.31 | 210.50 |

**(கோப்பு எண்.666/2021/இ1))**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.914 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :4

கீழக்கரை நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள "தமிழ் வாழ்க" என்ற நீயான் மின்விளக்கு பெயர் பலகை, இயற்கை சீற்றங்களின் காரணமாக சேதமடைந்து பழுதாகி உள்ளது. அதனை உடனடியாக மாற்றி புதிதாக "தமிழ் வாழ்க" என்ற நீயான் மின்விளக்கு பெயர் பலகையினை அமைக்குமாறு நகராட்சி ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, தற்போது பழுதாகி உள்ள பெயர் பலகையை மாற்றி புதிதாக நீயான் மின் பெயர் பலகை வைப்பதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண். 731/2021/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) .இந்நகராட்சி அலுவலகத்தின் முகப்பில் புதிதாக "தமிழ் வாழ்க" என்ற நீயான் மின்விளக்கு பெயர் பலகை அமைப்பதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) உள்ளூர் விலைப்புள்ளி பெற்று இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.915 அனுமதிக்கப்பட்டது.</u>**

ஒம்/—ப. சதீஷ்குமார்,
தனி அலுவலர் / ஆணையாளர்
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
கீழக்கரை நகராட்சி.